# சேலம் மாநகராட்சி

## 2014 - 2015
## நிதி நிலை அறிக்கை

வணக்கத்திற்குரிய மேயர்

# திரு. எஸ். சவுண்டப்பன்

அவர்களின்

2014 - 2015 ஆம் ஆண்டிற்கான

# சேலம் மாநகராட்சி

நிதி நிலை அறிக்கை மீதான உரை

**குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்**
**அடிதழீஇ நிற்கும் உலகு. – குறள்.**

அறிவையும், அறங்களையும் பாதுகாப்பதோடு அரசன் குடிகளின் அன்பையும், ஆதரவையும் அடையவேண்டும். தன்னுடைய குடிகளின் விருப்பத்தை அனுசரித்து அரசாட்சி நடத்தும் நாட்டின் மன்னவனுடைய பாதங்களில் பணிந்து மக்கள் அவனை வணங்கி வாழ்த்துவார்கள்.

**நாடு போற்றும் தேவர் திருமகனார்**
**பொன் முத்துராமலிங்க தேவருக்கு**
**தங்க கவசம் அணிவித்த**
**தங்க மனம் கொண்ட**
**மாண்புமிகு தமிழக முதலமைச்சர்**
**டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவின்**
**பெருமையை இந்த நாடே**
**பாராட்டி மகிழ்கிறது.**

**பரந்த மனப்பான்மை**
**தீர்க்கமான முடிவெடுத்தல்**
**தன்னலமற்ற நிர்வாகம்**
**எல்லாரும் எல்லாமும்**
**பெற வேண்டும் என்ற எண்ணம்**
**இத்தனை குணங்களும் ஒருங்கே**
**கொண்டவர்தான் மாண்புமிகு தமிழக**
**முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி**
**அம்மா அவர்கள்**

இத்தனை சிறப்பு வாய்ந்த **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களை வணங்கி மகிழ்கிறேன்.

சேலம் மாநகர மக்களுக்கு சேவை செய்வதற்கு வாய்ப்பளித்த **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் பொற்பாதங்களில் நன்றி மலர்களைக் காணிக்கையாக சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

1866–ல் சேலம் நகராட்சி மன்றம் தோற்றுவித்து, 1966–ல் நூற்றாண்டு விழா எடுத்து, 1994–ல் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களால் மாநகராட்சியாக நிலை உயர்த்தப்பட்டு இன்று 2014–ல் 149 வது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலம் மாநகராட்சியின் 2014–2015 ஆம் நிதியாண்டின் நிதி நிலை அறிக்கையைத் தாக்கல் செய்ய எனக்கு வாய்ப்பளித்த **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களுக்கும், மேலும் இந்த நிதி நிலை அறிக்கைக்கான மாமன்ற கூட்டத்திற்கு வருகை தந்துள்ள அத்துனை நல்ல உள்ளங்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஓரெட்டில் வளர்க்காத பிள்ளையும்**
**ஈரெட்டில் கற்காத கல்வியும்**
**மூவெட்டில் செய்யாத திருமணமும்**
**நாலெட்டில் பெறாத பிள்ளையும்**
**ஐயெட்டில் ஈட்டாத பொருளும்**
**ஆறெட்டில் பெறாத புகழும்**
**ஏழெட்டில் சுற்றாத ஊரும்**
**எட்டெட்டில் பெறாத ஓய்வும்**
**பயனற்றதே**

**–பொன்மொழிகள்–**

ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கை முறையையும்
ஒவ்வொரு எட்டாக பிரித்துக் காட்டி
அதன்படி வாழ்ந்தால் ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையும்
நன்மைபெறும்.

- குறைந்த விலையில் சுவை மிகுந்த தரமான உணவு வழங்கும் **அம்மா உணவகங்கள்**,

- குறைந்த விலையில் பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்கும் **அம்மா குடிநீர்த் திட்டம்**,

- வருவாய்த் துறை அலுவலர்கள் மக்களை நேரில் சந்தித்து அவர்களின் பிரச்சனைகளை உடனுக்குடன் தீர்த்து வைக்கும் **அம்மா திட்டம்**,

- 727 கோடி ரூபாய் செலவில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்,

- விவசாயிகள் மீது பரிவும், பாசமும் கொண்டுள்ள **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள், விவசாயிகளுக்கு உதவிடும் வகையில் வட்டியில்லா பயிர்க்கடன், மானிய விலையில் உரம், பூச்சிக்கொல்லி மருந்துகள், விதைகள், விவசாயக் கருவிகள், பாசனக் கருவிகள் முதலானவற்றை வழங்குதல்,

- விவசாயிகளின் மனம் குளிரும் வகையிலான பல்வேறு நலத் திட்டங்கள் அடங்கிய முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்,

- உத்தரகாண்ட் மாநிலத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட போது, அங்கு சிக்கித் தவித்த தமிழர்களை அரசு செலவில் பாதுகாப்பாக தமிழகத்திற்கு அழைத்து வந்தது,

- பொதுமக்களின் நலன் கருதியும், நிர்வாக வசதிக்காகவும், ஒன்றாக இருந்த சேலம் தாலுக்கா அலுவலகத்தை மூன்றாகப் பிரித்து சேலம் டவுன், சேலம் மேற்கு, சேலம் தெற்கு என மூன்று தாலுக்கா அலுவலகங்களாக செயல்பட ஆணைப் பிறப்பித்து புதிய தாலுக்கா அலுவலகங்களை தொடங்கி வைத்தது என, இரண்டரை

ஆண்டுகளில் எண்ணற்ற திட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுத்தி வருவதோடு, நாட்டின் வளர்ச்சிக்கு அடிப்படையான உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கியும், பல்வேறு வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்மானங்களை தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் நிறைவேற்றியும் மகத்தான சாதனைகளைப் படைத்து வரும் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களுக்கு எனது நெஞ்சம் நிறைந்த பாராட்டினையும், நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஒப்புடன் முக மலர்ந்து**
**ஒப்பியே உண்மை பேசி**
**உப்பில்லா கூழிட்டாலும்**
**உண்பதே அமிர்தமாகும்**
**முப்பழமொடு பாலன்னம்**
**முகம் கடுத்திடுவாராகில்**
**கப்பிய பசியினோடே**
**கடும் பசி ஆகும் தானே**

**– ஔவையார்**

முக மகிழ்ச்சியோடு, முழு மனதோடு தமிழ்நாட்டு மக்களுக்கு தேவையான திட்டங்களை செய்து வருபவர் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள்.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆசியோடு சேலம் மாநகராட்சி மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதமாகவும், வளர்ந்து வரும் மாநகரத்தின் முன்னேற்றத்தை கவனத்தில் கொண்டும், மத்திய மாநில அரசுகள், அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் மாநகராட்சியின் சொந்த நிதி ஆதாரம் ஆகியவற்றைக் கொண்டும் 2013–2014 ஆம் நிதியாண்டின் திருத்திய நிதி நிலை அறிக்கை மற்றும் 2014–2015ஆம் நிதியாண்டின் நிதி நிலை அறிக்கை ஆகியவற்றை மிக சிறப்பு வாய்ந்த இந்த மாமன்றத்தில் சமர்ப்பிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

## சேலம் மாநகராட்சி
## 2013-2014 ஆம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டம்
## வருவாய் கணக்கு

| வரவு இனங்கள் | | | செலவு இனங்கள் | | |
|---|---|---|---|---|---|
| வ. எண் | விபரம் | ரூபாய் இலட்சத்தில் | வ. எண் | விபரம் | ரூபாய் இலட்சத்தில் |
| 1. | சொத்து வரி | **2724.30** | 1. | மொத்த நிர்வாகச் செலவு | **6100.00** |
| 2. | தொழில் வரி | **588.80** | 2. | பொது பணிகள் | **3450.00** |
| 3. | கேளிக்கை வரி | **300.00** | 3. | குடிநீர் பராமரிப்பு | **2450.00** |
| 4. | முத்திரைத்தாள் கட்டணம் | **380.00** | 4. | மின்கட்டணம் | **400.00** |
| 5. | சொத்துக்கள் மூலம் வரவு | **911.00** | 5. | தெருவிளக்கு பராமரிப்பு | **1150.00** |
| 6. | குடிநீர் விநியோக வரவு | **2140.00** | 6. | பொது சுகாதாரம் மற்றும் மலேரியா | **520.00** |
| 7. | குடிநீர் இணைப்பு வைப்புத் தொகை | **200.00** | 7. | கல்வி | **1426.00** |
| 8. | கட்டணங்கள் மூலம் வரவு | **340.00** | 8. | நூலக வரி | **100.00** |
| 9. | அரசு நிதி உதவி மற்றும் மானியம் | **8141.90** | 9. | வாகனங்கள் பராமரிப்பு | **350.00** |
| 10. | பாதாள சாக்கடை இணைப்பு வைப்புத் தொகை | **300.00** | 10. | கட்டிடங்கள் பராமரிப்பு | **200.00** |
| 11. | இதர வரவுகள் | **520.00** | 11. | இதர செலவுகள் | **400.00** |
| | **மொத்த வரவினம்** | **16546.00** | | **மொத்த செலவினம்** | **16546.00** |

## சேலம் மாநகராட்சி
## 2013-2014 ஆம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டம்
## மூலதனக் கணக்கு

| வரவு இனங்கள் | | | செலவு இனங்கள் | | |
|---|---|---|---|---|---|
| வ. எண் | விபரம் | ரூபாய் இலட்சத்தில் | வ. எண் | விபரம் | ரூபாய் இலட்சத்தில் |
| 1. | தன்னிறைவுத் திட்டம் (SSS) | **77.66** | 1. | தன்னிறைவுத் திட்டம் (SSS) | **77.66** |
| 2. | மாவட்ட ஆட்சித்தலைவர் வளர்ச்சிப் பணி ஊக்கத்தொகை | **50.00** | 2. | மாவட்ட ஆட்சித்தலைவர் வளர்ச்சிப் பணி ஊக்கத்தொகை | **50.00** |
| 3. | உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி (எரிவாயு தகன மேடை, குடிநீர் பணி) | **526.00** | 3. | திருமணி முத்தாறு அபிவிருத்தித் திட்டம் நிலை -II | **150.00** |
| 4. | பாதாள சாக்கடை திட்டம் | **1400.00** | 4. | பாதாள சாக்கடை திட்டம் | **1400.00** |
| 5. | தனிக்குடிநீர் திட்டம் | **5860.00** | 5. | தனிக்குடிநீர் திட்டம் | **5860.00** |
| 6. | ஐ.எச்.எஸ்.டி.பி. (IHSDP) | **365.00** | 6. | ஐ.எச்.எஸ்.டி.பி. (IHSDP) | **365.00** |
| 7. | 13 வது நிதிக்குழு மானியம் | **801.00** | 7. | 13 வது நிதிக்குழு மானியம் | **801.00** |
| 8. | ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தித் திட்டம் (IUDM) | **1549.00** | 8. | ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தித் திட்டம் (IUDM) | **2211.00** |
| 9. | நகர்ப்புற சாலை அபிவிருத்தித் திட்டம் (TURIP) | **800.00** | 9. | நகர்ப்புற சாலை அபிவிருத்தித் திட்டம் (TURIP) | **953.80** |
| 10. | பிளாஸ்ட்டிக் சாலை | **100.00** | 10. | பிளாஸ்ட்டிக் சாலை | **114.90** |
| 11. | இயற்கை பேரிடர் மேலாண்மை | **40.00** | 11. | இயற்கை பேரிடர் மேலாண்மை | **40.00** |
| 12. | மீன் மார்கெட் | **90.00** | 12. | மீன் மார்கெட் | **100.00** |
| 13. | திறந்தவெளியில் மனித கழிவு கழிக்கும் நிலை ஒழிக்கும் திட்டம் | **64.20** | 13. | திறந்தவெளியில் மனித கழிவு கழிக்கும் நிலை ஒழிக்கும் திட்டம் | **64.20** |
| 14. | நம்ம டாய்லட் | **80.40** | 14. | நம்ம டாய்லட் | **75.00** |
| 15. | நகர் ஊரமைப்பு நிதி | **130.00** | 15. | நகர் ஊரமைப்பு நிதி | **15.00** |
| 16. | மின்சார சேமிப்பு மற்றும் LED விளக்குகள் அமைத்தல் | **100.00** | 16. | மின்சார சேமிப்பு மற்றும் LED விளக்குகள் அமைத்தல் | **100.00** |
| 17. | ஆனந்தாபாலம் அணுகு சாலை மற்றும் குண்டு போடும் பாலம் | **196.00** | 17. | ஆனந்தாபாலம் அணுகு சாலை மற்றும் குண்டு போடும் பாலம் | **236.43** |
| 18. | வறட்சி நிவாரண நிதி | **100.00** | 18. | வறட்சி நிவாரண நிதி | **110.00** |
| 19. | கடன் (தனிக்குடிநீர் திட்டம்) | **3700.00** | 19. | கடன் திருப்பிச் செலுத்துதல் | **2500.00** |
| | | | 20. | அம்மா உணவகம் | **805.27** |
| | **மொத்தம்** | **16029.26** | | **மொத்தம்** | **16029.26** |
| | **ஆக மொத்த வரவினம்** | **32575.26** | | **ஆக மொத்த செலவினம்** | **32575.26** |

# சேலம் மாநகராட்சி
## 2014-2015 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டம்
## வருவாய் கணக்கு

| வரவு இனங்கள் | | | செலவு இனங்கள் | | |
|---|---|---|---|---|---|
| வ. எண் | விபரம் | ரூபாய் இலட்சத்தில் | வ. எண் | விபரம் | ரூபாய் இலட்சத்தில் |
| 1. | சொத்து வரி | **2970.00** | 1. | மொத்த நிர்வாகச் செலவு | **7400.00** |
| 2. | தொழில் வரி | **650.00** | 2. | பொதுப் பணிகள் | **4000.00** |
| 3. | கேளிக்கை வரி | **300.00** | 3. | குடிநீர் பராமரிப்பு | **2800.00** |
| 4. | முத்திரைத்தாள் கட்டணம் | **400.00** | 4. | தெருவிளக்கு பராமரிப்பு | **1200.00** |
| 5. | சொத்துக்கள் மூலம் வரவு | **1100.00** | 5. | பொது சுகாதாரம் மற்றும் மலேரியா | **1000.00** |
| 6. | குடிநீர் விநியோக வரவு | **2600.00** | 6. | கல்வி | **600.00** |
| 7. | குடிநீர் இணைப்பு வைப்புத் தொகை | **350.00** | 7. | நூலக வரி | **300.00** |
| 8. | கட்டணங்கள் மூலம் வரவு | **400.00** | 8. | வாகனங்கள் பராமரிப்பு | **650.00** |
| 9. | அரசு நிதி உதவி மற்றும் மானியம் | **9000.00** | 9. | கட்டிடங்கள் பராமரிப்பு | **300.00** |
| 10. | அம்மா உணவகங்கள் மானியம் | **500.00** | 10. | அம்மா உணவகங்கள் பராமரிப்பு | **500.00** |
| 11. | பாதாள சாக்கடை இணைப்பு வைப்புத் தொகை | **700.00** | 11. | இயற்கை பேரிடர் மேலாண்மை | **200.00** |
| 12. | இதர வரவுகள் | **650.00** | 12. | இதர செலவுகள் | **200.00** |
| | | | 13. | கடன் திருப்பிச் செலுத்துதல் | **900.00** |
| | **மொத்த வரவினம்** | **19620.00** | | **மொத்த செலவினம்** | **20050.00** |

## சேலம் மாநகராட்சி
## 2014-2015 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டம்
## மூலதனக் கணக்கு

| வரவு இனங்கள் | | | செலவு இனங்கள் | | |
|---|---|---|---|---|---|
| வ. எண் | விபரம் | ரூபாய் இலட்சத்தில் | வ. எண் | விபரம் | ரூபாய் இலட்சத்தில் |
| 1. | தன்னிறைவுத் திட்டம் (SSS) | 77.66 | 1. | தன்னிறைவுத் திட்டம் (SSS) | 77.66 |
| 2. | பாதாள சாக்கடை திட்டம் | 7422.00 | 2. | பாதாள சாக்கடை திட்டம் | 7422.00 |
| 3. | தனிக்குடிநீர் திட்டம் | 5345.00 | 3. | தனிக்குடிநீர் திட்டம் | 5345.00 |
| 4. | ஐ.எச்.எஸ்.டி.பி. (IHSDP) | 365.00 | 4. | ஐ.எச்.எஸ்.டி.பி. (IHSDP) | 365.00 |
| 5. | 13 வது நிதிக்குழு மானியம் | 900.00 | 5. | 13 வது நிதிக்குழு மானியம் | 900.00 |
| 6. | ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தித் திட்டம் (IUDM) | 8560.00 | 6. | ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தித் திட்டம் (IUDM) | 8560.00 |
| 7. | நகர்ப்புற சாலை அபிவிருத்தித் திட்டம் (TURIP) | 1000.00 | 7. | நகர்ப்புற சாலை அபிவிருத்தித் திட்டம் (TURIP) | 1000.00 |
| 8. | பிளாஸ்டிக் சாலை | 100.00 | 8. | பிளாஸ்டிக் சாலை | 100.00 |
| 9. | இயற்கை பேரிடர் மேலாண்மை | 100.00 | 9. | இயற்கை பேரிடர் மேலாண்மை | 100.00 |
| 10. | மீன் மார்கெட் | 45.00 | 10. | மீன் மார்கெட் | 45.00 |
| 11. | திறந்தவெளியில் மனித கழிவு கழிக்கும் நிலை ஒழிக்கும் திட்டம் | 118.10 | 11. | திறந்தவெளியில் மனித கழிவு கழிக்கும் நிலை ஒழிக்கும் திட்டம் | 118.10 |
| 12. | இயக்கமும் மற்றும் பராமரிப்பும் இடைவெளி நிரப்பும் நிதி | 3202.50 | 12. | இயக்கமும் மற்றும் பராமரிப்பும் இடைவெளி நிரப்பும் நிதி | 3202.50 |
| 13. | நவீன இறைச்சி கூடம் | 100.00 | 13. | நவீன இறைச்சி கூடம் | 100.00 |
| 14. | நகர் ஊரமைப்பு நிதி | 3668.50 | 14. | நகர் ஊரமைப்பு நிதி | 3668.50 |
| 15. | மின்சார சேமிப்பு மற்றும் LED விளக்குகள் அமைத்தல் | 1900.00 | 15. | மின்சார சேமிப்பு மற்றும் LED விளக்குகள் அமைத்தல் | 1900.00 |
| 16. | வறட்சி நிவாரண நிதி | 100.00 | 16. | வறட்சி நிவாரண நிதி | 100.00 |
| 17. | வைப்புத் தொகை | 1440.00 | 17. | வைப்புத் தொகை | 1440.00 |
| | மொத்தம் | 34443.76 | | மொத்தம் | 34443.76 |
| | ஆக மொத்த வரவினம் | 54063.76 | | ஆக மொத்த செலவினம் | 54493.76 |

**பற்றாக்குறை - 430.00**

## சேலம் மாநகராட்சி
## 2013-2014 ஆம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டம்
## கல்வி நிதி

| வரவு இனங்கள் | | | செலவு இனங்கள் | | |
|---|---|---|---|---|---|
| வ. எண் | விபரம் | ரூபாய் இலட்சத்தில் | வ. எண் | விபரம் | ரூபாய் இலட்சத்தில் |
| 1. | கல்வி வரி | **425.00** | 1. | பள்ளிக் கட்டிடங்கள் மற்றும் கூடுதல் கட்டிடங்கள் | **450.00** |
| 2. | முதலீடுகள் செய்த தொகை | **509.28** | 2. | முதலீடுகள் செய்த தொகை | **509.23** |
| 3. | முதலீடுகள் மீதான வட்டி மற்றும் வங்கிகள் மூலம் வட்டி | **38.63** | 3. | பள்ளி வாடகை | **1.00** |
| 4. | சிறுவர்கள் கழிப்பகம் (அங்கன்வாடி) | **33.12** | 4. | 10 வது, 12 வது வகுப்பு இறுதித் தேர்வில் முதல் 25 இடம் பிடித்த மாநகராட்சி பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு பரிசு, நிதியுதவி வழங்க நிதி ஒதுக்கீடு | **0.70** |
| | | | 5. | சிறுவர்கள் கழிப்பகம் (அங்கன்வாடி) | **42.60** |
| | | | 6. | 5 வது ஊதியக்குழு நிலுவை | **2.50** |
| | **மொத்தம்** | **1006.03** | | **மொத்தம்** | **1006.03** |

## சேலம் மாநகராட்சி
## 2014-2015 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டம்
## கல்வி நிதி

| வரவு இனங்கள் | | | செலவு இனங்கள் | | |
|---|---|---|---|---|---|
| வ. எண் | விபரம் | ரூபாய் இலட்சத்தில் | வ. எண் | விபரம் | ரூபாய் இலட்சத்தில் |
| 1. | கல்வி வரி | **500.00** | 1. | பள்ளிக் கட்டிடங்கள் மற்றும் கூடுதல் கட்டிடங்கள் (2013-2014ம் ஆண்டுக்கான திட்ட மதிப்பீடு) | **547.91** |
| 2. | முதலீடுகள் செய்த தொகை | **547.91** | 2. | பள்ளிக் கட்டிடங்கள் மற்றும் கூடுதல் கட்டிடங்கள் (2014-2015ம் ஆண்டுக்கான திட்ட ஒதுக்கீடு) | **500.00** |
| 3. | முதலீடுகள் மீதான வட்டி மற்றும் வங்கிகள் மூலம் வட்டி | **50.00** | 3. | பள்ளி வாடகை | **3.00** |
| | | | 4. | 10 வது, 12 வது வகுப்பு இறுதித் தேர்வில் முதல் 25 இடம் பிடித்த மாநகராட்சி பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு பரிசு, நிதியுதவி வழங்க நிதி ஒதுக்கீடு | **1.00** |
| | | | 5. | சிறுவர்கள் கழிப்பகம் (அங்கன்வாடி) | **33.00** |
| | | | 6. | 5 வது ஊதியக்குழு நிலுவை | **10.00** |
| | | | 7. | இதர இனங்கள் | **3.00** |
| | **மொத்தம்** | **1097.91** | | **மொத்தம்** | **1097.91** |

## சேலம் மாநகராட்சி

## 2013 – 2014 ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவுத் திட்ட விவரங்கள்

**வருவாய் கணக்கு**

| | | |
|---|---|---|
| மொத்த வரவினம் | ரூ. 16546.00 | இலட்சங்கள் |
| மொத்த செலவினம் | ரூ. 16546.00 | இலட்சங்கள் |

**மூலதனக் கணக்கு**

| | | |
|---|---|---|
| மொத்த வரவினம் | ரூ. 16029.26 | இலட்சங்கள் |
| மொத்த செலவினம் | ரூ. 16029.26 | இலட்சங்கள் |
| **ஆக மொத்த வரவு** | **ரூ. 32575.26** | **இலட்சங்கள்** |
| **ஆக மொத்த செலவு** | **ரூ. 32575.26** | **இலட்சங்கள்** |

2013–2014 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட பற்றாக்குறையான தொகை ரூ.490.50 இலட்சங்களை மாநகராட்சியின் வருவாய் மற்றும் அரசு நிதியுதவிகள் மூலமாக சரி செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## சேலம் மாநகராட்சி

## 2014 – 2015 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட விவரங்கள்

### வருவாய் கணக்கு

| | | |
|---|---|---|
| மொத்த வரவினம் | ரூ. 19620.00 | இலட்சங்கள் |
| மொத்த செலவினம் | ரூ. 20050.00 | இலட்சங்கள் |

### மூலதனக் கணக்கு

| | | |
|---|---|---|
| மொத்த வரவினம் | ரூ. 34443.76 | இலட்சங்கள் |
| மொத்த செலவினம் | ரூ. 34443.76 | இலட்சங்கள் |
| **ஆக மொத்த வரவு** | **ரூ. 54063.76** | **இலட்சங்கள்** |
| **ஆக மொத்த செலவு** | **ரூ. 54493.76** | **இலட்சங்கள்** |
| **பற்றாக்குறை** | **ரூ. 430.00** | **இலட்சங்கள்** |

இந்த நிதி நிலை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பற்றாக்குறையை சேலம் மாநகராட்சியின் வருவாயை மேம்பாடு செய்தும், நிதி ஆதாரங்களை கூடுதலாகப் பெற்றும், சிக்கன நடவடிக்கை மூலமும் சரிசெய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## வருவாய் கணக்கு

### வரியினங்கள் (Taxes)

### சொத்துவரி

| | |
|---|---|
| மொத்த வரிவிதிப்புகள் | –1,86,079 எண்ணிக்கைகள் |
| ஜனவரி **2014** முடிய வரி வசூல் | – ரூ.1772.03 இலட்சங்கள் |
| **2013–2014**க்கு எதிர்பார்க்கப்படும் வரி வசூல் | – ரூ. 2724.30 இலட்சங்கள் |
| **2014–2015**க்கு உத்தேசிக்கப்படும் வரி வசூல் | – ரூ. 2970.00 இலட்சங்கள் |

வருகின்ற நிதி ஆண்டில் நிலுவையில் உள்ள மாநகராட்சி சொத்துவரி உள்ளிட்ட பிற வரிகள் மற்றும் வரியில்லா இனங்கள் முழுவதும் மாநகராட்சி அலுவலர்களின் துணையோடு வசூல் செய்யப்படும். நிலுவையிலுள்ள சொத்துவரி வழக்குகளை விரைவில் முடிவுக்கு கொண்டு வரவும், அரசு மற்றும் அரசு சார்பு நிறுவனங்களிலிருந்து மாநகராட்சிக்கு வரவேண்டிய நிலுவை சொத்துவரித் தொகைகளை வசூலிக்கவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மாநகராட்சியின் நிதி ஆதாரத்தை மேம்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

### தொழில்வரி

| | |
|---|---|
| ஜனவரி **2014** முடிய வரி வசூல் | – ரூ. 294.09 இலட்சங்கள் |
| **2013–2014**க்கு எதிர்பார்க்கப்படும் வரி வசூல் | – ரூ. 588.80 இலட்சங்கள் |
| **2014–2015**க்கு உத்தேசிக்கப்படும் வரி வசூல் | – ரூ. 650.00 இலட்சங்கள் |

### குடிநீர் கட்டணம்

| | |
|---|---|
| மொத்த குடிநீர் இணைப்புகள் | – 90,230 எண்ணிக்கைகள் |
| ஜனவரி **2014** முடிய வசூல் (வழித்தட கிராம குடிநீர் கட்டணம் உட்பட) | – ரூ.1340.80 இலட்சங்கள் |
| **2013–2014**க்கு எதிர்பார்க்கப்படும் வரவு | – ரூ. 2140.00 இலட்சங்கள் |
| **2014–2015**க்கு உத்தேசிக்கப்படும் வரவு | – ரூ. 2600.00 இலட்சங்கள் |

**வரியில்லாயினங்கள் (Non-Taxes)**

**கேளிக்கை வரி**

2013–2014ஆம் ஆண்டிற்கு எதிர்பார்க்கப்படும் வரவு – ரூ. 300.00 இலட்சங்கள்

2014–2015 ஆம் ஆண்டிற்கு உத்தேசிக்கப்படும் வரவு – ரூ.300.00 இலட்சங்கள்

**முத்திரைத்தாள் கட்டணம்**

2013–2014ஆம் ஆண்டிற்கு எதிர்பார்க்கப்படும் வரவு – ரூ. 380.00 இலட்சங்கள்

2014–2015 ஆம் ஆண்டிற்கு உத்தேசிக்கப்படும் வரவு – ரூ. 400.00 இலட்சங்கள்

**சொத்துகள் மூலம் வரவு**

குத்தகை இனங்கள் (ஆண்டு உரிமையாணை இனங்கள்)

2013–2014க்கு எதிர்பார்க்கப்படும் வருவாய் – ரூ. 619.75 இலட்சங்கள்

2014–2015க்கு உத்தேசிக்கப்படும் வருவாய் – ரூ. 700.00 இலட்சங்கள்

**மாநகராட்சி கடைகள்**

2013–2014க்கு எதிர்பார்க்கப்படும் வருவாய் – ரூ. 291.25 இலட்சங்கள்

2014–2015க்கு உத்தேசிக்கப்படும் வருவாய் – ரூ. 400.00இலட்சங்கள்

**கட்டணங்கள் மூலம் வருவாய்**

2013–2014க்கு எதிர்பார்க்கப்படும் வருவாய் – ரூ. 340.00இலட்சங்கள்

2014–2015க்கு உத்தேசிக்கப்படும் வருவாய் – ரூ. 400.00இலட்சங்கள்

**அரசு நிதியுதவி மற்றும் மான்யம்**

2013–2014க்கு எதிர்பார்க்கப்படும் வருவாய் – ரூ.8141.90 இலட்சங்கள்

2014–205க்கு உத்தேசிக்கப்படும் வருவாய் – ரூ.9000.00இலட்சங்கள்

**இதர வருவாய்**

2013–2014க்கு எதிர்பார்க்கப்படும் வருவாய் – ரூ. 520.00இலட்சங்கள்

2014–2015க்கு உத்தேசிக்கப்படும் வருவாய் – ரூ. 650.00இலட்சங்கள்

## பொறியியல் பிரிவு
## சிறப்புத் திட்டங்கள்

### அம்மா உணவகம்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ட்டமன்ற பேரவை விதி எண்.110ன்கீழ் 15.05.2013–ந் தேதிய அறிவிப்பின் படியும், அரசாணை (நிலை) எண்–79 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் : 31.05.2013–ன் படியும் சேலம் மாநகராட்சியில் 10 எண்ணிக்கையிலான மலிவு விலை உணவகங்கள் அமைக்கப்பட்டு 02.06.2013–ம் தேதி அன்று அம்மா உணவகங்களை **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களால் காணொலி காட்சியின் மூலமாக துவக்கி வைக்கப்பட்டது.

மேற்படி குறைந்த விலை உணவகங்களின் தேவைக்கான உணவு பொருட்கள் உளுந்து, துவரம் பருப்பு, சமையல் எண்ணெய், வெந்தயம், பூண்டு, மிளகாய், புளி, மஞ்சள் பொடி, கடுகு, மசாலா, பெருங்காயம் ஆகியவற்றை பொன்னிக்கூட்டுறவு சிறப்பங்காடியிலிருந்தும், அரிசியினை தமிழ்நாடு நுகர்ப் பொருள் வாணிபக் கழகத்திடமிருந்தும், பால் பொருட்களை ஆவின் நிறுவனத்திலிருந்தும் பெறப்பட்டு வருகிறது.

இந்த உணவகங்கள் துவங்கப்பட்டு 8 மாதங்களுக்கும் மேலாக சிறப்பாக செயல்பட்டு வருவதுடன் அனைத்து மக்களின் பாராட்டுதழ்களையும், வரவேற்புகளையும் இத்திட்டம் பெற்றுள்ளது. சேலம் மாநகராட்சியில் சூரமங்கலம் மண்டலத்தில் 3 உணவகங்களும், அஸ்தம்பட்டி மண்டலத்தில் 3 உணவகங்களும், அம்மாபேட்டை மண்டலத்தில் 2 உணவகங்களும், கொண்டலாம்பட்டி மண்டலத்தில் 2 உணவகங்களும் மொத்தம் 10 அம்மா உணவகங்கள் சிறப்பாக செயல்படுகின்றன. சுகாதாரமான முறையில் உணவு தயாரிக்க மகளிர் சுய உதவிக் குழுவினர்களுக்கு சமையல் கலை வல்லுநர்கள் மூலம் பயிற்சிகள் வழங்கப்பட்டு ஒரு உணவகத்திற்கு 12 நபர்கள் வீதம் 120 நபர்கள் பணியில் அமர்த்தப்பட்டு உணவகங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த உணவகங்களில் தினந்தோறும் காலையில் சாம்பாருடன் கூடிய இட்லி ஒன்றுக்கு ரூ.1.00 வீதமும், மதியம் சாம்பார் சாதம் ரூ.5.00 க்கும் தயிர் சாதம் ரூ.3.00க்கும் மலிவுவிலையில் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் உத்தரவிற்கிணங்க, தமிழர் திருநாளாம் தை 1–ம் நாள் பொங்கல் பண்டிகையன்று சேலம் மாநகராட்சியின் 10 அம்மா உணவகங்களிலும் சிறப்பு உணவாக சர்க்கரைப் பொங்கல் ரூ.5.00க்கு விற்பனை செய்யப்பட்டது என்பதனை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் ஒவ்வொரு உணவகத்திற்கும் தனித்தனியே சமையல் பாத்திரங்கள், கிரைண்டர், எரிவாயு அடுப்பு, குளிர்சாதனப்பெட்டி போன்ற 56 வகையான பொருட்கள் ரூ.3.07 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த உணவகங்களில் இருப்புக் கிடங்கு, சமையலறை, உணவு தயாரிப்பு அறை, டோக்கன் வழங்கும் இடம், உணவு விநியோக அறை, உணவு உண்ணுமிடம், காத்திருக்கும் அறை, சிறுவர்கள் அமர்ந்து சாப்பிட தனி இடவசதி, மாற்றுத் திறனாளிகளின் வசதிக்காக சாய்வு தளம், சுத்திகரிக்கப்பட்ட சுகாதாரமான குடிநீர், வெந்நீரில் பாத்திரங்களை சுத்தம் செய்திட சோலார் வாட்டர் ஹீட்டர் ஆகிய வசதிகளுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அரசின் நலத்திட்டங்களை அறியும் வகையில் வண்ணத் தொலைக்காட்சி பெட்டிகள் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. ஜனவரி–2014 ஆம் மாதம் வரை 27,31,094 பொதுமக்கள் இந்த உணவகங்களில் உணவு உண்டு பயன் பெற்றுள்ளனர் என்ற மகிழ்ச்சியான தகவலை தெரிவித்துக் கொள்கிறேன்.

## தனிக்குடிநீர் திட்டம் மதிப்பீடு ரூ.320.54 கோடி

சேலம் மாநகராட்சியின் பொதுமக்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் குடிநீர் போதுமான அளவு கிடைக்கப் பெறாததால் மாநகராட்சி பகுதியில் 7 முதல் 10 நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருவதை தவிர்க்கும் பொருட்டு சேலம் மாநகராட்சிக்கு என தனியாக குடிநீர் திட்டத்தினை செயல்படுத்திட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறையின் அரசாணை எண்.57, நாள்: 11.06.2012–ல் ரூ.320.54 கோடிக்கு திருத்திய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

## தனிக்குடிநீர் திட்டம் நிலை–I

இத்திட்டத்தில் கருப்பூர் இரயில்வே பாலம் முதல் மாநகராட்சி ரெட்டிபட்டி பிரிவு வரை 2.19 கி.மீ. நீளத்திற்கு மெயின் குழாய்கள் பதிக்க வேண்டியிருந்தது. இந்த சாலை தேசிய நெடுஞ்சாலை ஆணையகத்திற்கு சொந்தமான சாலை என்பதால் மேற்படி தேசிய நெடுஞ்சாலை ஆணையகத்தின் அனுமதி பெற வேண்டியதாக இருந்தது.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் சீரிய முயற்சியால், நீண்ட காலமாக நிலுவையில் இருந்து வந்த அனுமதி, கடந்த அக்டோபர் மாதம் கிடைக்கப்பெற்று பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது.

தனிக்குடிநீர் திட்டத்திற்கு நாளது தேதிவரை ரூ.171.61 கோடி செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டம் சோதனை ஓட்டம் நடைபெற தயாராகி வருகிறது. மேலும் நிலை–Iக்கான பணிகள் அனைத்தும் விரைவில் முடிக்கப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டிற்கு விடப்பட உள்ளது.

## பாதாளசாக்கடைத் திட்டம் ரூ. 149.39 கோடி

சேலம் மாநகராட்சிக்கு பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்த அரசு ஆணை எண். 60 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 23.02.2006ல் ரூ.149.39 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் மூன்று சிப்பங்கள் கழிவு நீர் குழாய் பதிக்கும் பணியாகும், நான்கு சிப்பங்கள் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டும் பணியாகும். இத்திட்டத்திற்கு **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் அரசு பொறுப்பேற்ற பிறகு பணிகள் விரைவாக முடிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

கழிவு நீர் குழாய் பதிக்கும் சிப்பம் 1 மற்றும் 3–க்கான பணிகளை நிறைவேற்றிட ஒப்பந்தம் பெற்றுள்ள மெசர்ஸ் பி.எஸ்.வி.சி.பி.எல்–பி.பி.ஜ.பி.எல் (ஜேவி) ஹைதராபாத் என்ற ஒப்பந்த நிறுவனம் பணியினை சரிவர செய்யாமல் காலதாமதப்படுத்தி வந்ததால் இந்த ஒப்பந்ததாரரின் ஒப்பந்தம் 15.07.2013ல் ரத்து செய்யப்பட்டுள்ளது.

மீதமுள்ள பணிகளுக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதி பெற்று தமிழ்நாடு நகர்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்தின் தடையின்மை சான்று பெறப்பட்டு ஒப்பந்தபுள்ளிகள் 13.02.2014ல் கோரப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. மூன்று சிப்பங்களில் சேர்த்து மொத்தம் பதிக்கவேண்டிய 421 கி.மீட்டர் நீளத்தில் இதுவரை 150.82 கி.மீட்டர் நீளத்திற்கு கழிவு நீர்குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளது.

மேலும் கழிவு நீர் குழாய்கள் மூலம் பெறப்படும் கழிவுநீரை நவீன முறையிலான கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (DBOT) வடிவமைத்து கட்டி இயக்கி பராமரித்து திரும்ப ஒப்படைக்கும் முறையில் நான்கு பகுதிகளில் 1) வெள்ளக்குட்டை (13 எம்.எல்.டி), 2) வண்டிப்பேட்டை (44 எம்.எல்.டி), 3) மான்குட்டை (35 எம்.எல்.டி), 4) அணைமேடு (6 எம்.எல்.டி) சுத்திகரிப்பு நிலையம் கட்டும் பணிகளில் இதுவரை 80 சதவீத பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

## ஆக்ஸ்போர்டு ஆனந்தா உயர்மட்ட பாலத்திற்கான இணைப்புச் சாலைகள் விரிவாக்க பணி

சேலம் மாநகரத்தின் மையத்தில் செல்லும் திருமணி முத்தாற்றின் குறுக்கே ஆக்ஸ்போர்டு – ஆனந்தா அருகில் போக்குவரத்து வசதியினை கருத்தில் கொண்டு உயர்மட்ட பாலம் கட்டப்பட்டு அதன் அணுகுசாலைகளை அகலப்படுத்திட பாலத்தினை ஒட்டியுள்ள தனியாருக்கு சொந்தமான 10343.75 சதுர அடி நிலத்தினை மாநகராட்சி பெற்றிட தேவையான நிதி ரூ.290.00 இலட்சத்தினை **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் அரசு பொறுப்பேற்றவுடன் **மாண்புமிகு தமிழக நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்** அவர்களின் சீரிய தொடர் முயற்சியால் எட்டு தனியாரிடம் இருந்து நிலங்கள் பெற்று, மேற்படி இடத்தில் எதிர்கால போக்குவரத்திற்கு ஏற்றவாறு அணுகு சாலைகள் ரூ.140.00 இலட்சம் மதிப்பீட்டு செலவில் அமைக்கப்பட்டு 03.01.2014 முதல் பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது.

## குண்டுபோடும் பாலத்திற்கான இணைப்புச் சாலைகள் விரிவாக்க பணி

சேலம் மாநகரத்தின் மையத்தில் செல்லும் திருமணிமுத்தாற்றின் குறுக்கே குண்டுபோடும் தெரு மற்றும் திருச்சி பிரதான சாலையினை இணைக்கும் விதமாக எதிர்கால போக்குவரத்து வசதியினை கருத்தில் கொண்டு பாலம் கட்டப்பட்டு அதற்கான அணுகு சாலையினை அகலப்படுத்தி அமைத்திட பாலத்தினை ஒட்டியுள்ள தனியாருக்கு சொந்தமான 4187 சதுர அடி நிலத்தினை மாநகராட்சி பெற்றிட தேவையான நிதி ரூ.118.00 இலட்சத்தினை **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் அரசு பொறுப்பேற்றவுடன் **மாண்புமிகு தமிழக நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்** அவர்களின் சீரிய தொடர் முயற்சியால் நான்கு தனியாரிடம் இருந்து நிலங்கள் பெற்று, மேற்படி இடத்தில் எதிர்கால போக்குவரத்திற்கு ஏற்றவாறு அணுகு சாலைகள் ரூ.85.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு 03.01.2014 முதல் பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது.

## புதிய அலுவலக கட்டிடம்

சேலம் நகராட்சி 1866 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. சுமார் 130 ஆண்டுகளுக்கு பின் 1994–ல் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. தற்போது இருக்கும் மாநகராட்சி கட்டிடம் 148 ஆண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்த கட்டிடமாக உள்ளது. மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட பிறகு வணக்கத்திற்குரிய மேயர், துணைமேயர், மாமன்ற கூடம், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் பயன்பாட்டிற்கு சரியான முறையில் இட வசதி இல்லாமல் இருப்பதுடன் மேற்படி கட்டிடங்கள் பழுதடைந்த நிலையில் உள்ளது.

இதனை கருத்தில் கொண்டு **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களால் இந்த பழைமை வாய்ந்த கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்தி புதிய அலுவலக கட்டிடம் ரூ.7.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள ஆணை வழங்கப்பட்டு 30.12.2013–ம் தேதியில் புதிய கட்டிடம் கட்டும் பணிக்கு **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது.

புதிய மைய அலுவலக தரை கீழ்தளம் கட்டிடத்தில் (22,224 சதுர அடி) இரண்டு சக்கர, நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடம், ஓட்டுநர்கள் ஓய்வு அறை, மின் அமைப்பு ஜெனரேட்டர் அறை, மாற்றுத் திறனாளிகளுக்கான அறை மற்றும் மின்தூக்கி அறை அமைக்கப்படும்.

தரை தளம் கட்டிடத்தில் (22,224 சதுர அடி) தகவல் மையம், கட்டுப்பாட்டு அறை, கருவூலம், கணக்கு பிரிவு, வருவாய் பிரிவு, பொது பிரிவு, தேர்தல் பிரிவு, நகரமைப்பு பிரிவு, பொறியியல் பிரிவு, நில அளவையாளர்கள் பிரிவு, பிறப்பு, இறப்பு பதிவு அறை மற்றும் பார்வையாளர்கள் காத்திருப்பு அறை அமைக்கப்படும்.

முதல் தளம் கட்டிடத்தில் (22,224 சதுர அடி) மாமன்ற கூட்ட அரங்கம், வணக்கத்திற்குரிய மேயர் அலுவலகம், துணை மேயர் அலுவலகம், ஆணையாளர் அலுவலகம், பார்வையாளர்கள் காத்திருப்பு அறை, உதவியாளர்கள் பிரிவு, வரி மேல்முறையீட்டு தீர்ப்பாய அலுவலகம், நிலைக்குழு தலைவர்கள் அறை, மாமன்ற உறுப்பினர்கள் ஓய்வு அறை மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் அலுவலகம் ஆகிய வசதிகள் செய்யப்பட்டுள்ளது. இப்பணி 2 ஆண்டுகளில் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

### ஒருங்கிணைந்த குடிசைப்பகுதி குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம் (IHSDP)

சேலம் மாநகராட்சியின் நான்கு மண்டலங்களிலும் 113 அங்கீகரிக்கப்பட்ட குடிசைப்பகுதிகள் உள்ளன. சேலம் மாநகரை குடிசைகளே இல்லாத மாநகரமாக உருவாக்கும் பொருட்டு, மத்திய, மாநில அரசின் பங்களிப்புடன் ஒருங்கிணைந்த குடிசைப் பகுதிகளில் ஒருங்கிணைந்த குடிசைப்பகுதி குடியிருப்பு மேம்பாட்டு திட்டத்தில் தனிக்குடியிருப்புகள் கட்டுதல் அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு பணிகள் செயல்படுத்த 1006 பயனாளிகளுக்கு தனிகுடியிருப்புகள் கட்டுவதற்கு பணி ஆணை வழங்கப்பட்டு 994 எண்ணிக்கையில் முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 12 குடியிருப்புகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. நாளது தேதி வரை மத்திய, மாநில அரசு மானியமாக தொகை ரூ.1417.40 இலட்சம் பெறப்பட்டுள்ளது.

மேற்படி நிதியில் தனிக்குடியிருப்புகள் கட்டுதலில் வெவ்வேறு நிலைகளில் நாளது தேதி வரை ரூ.856.96 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மேலும் அடிப்படை வசதி பணிகள் மற்றும் உள்கட்டமைப்பு பணிகள் 20 எண்ணிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு 17 பணிகள் ரூ.206.22 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளது. மொத்தம் ரூ.1065.18 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள மூன்று பணிகளில் குடிநீர் இணைப்பு மற்றும் பாதாள சாக்கடை கழிவு நீர் இணைப்பு பணிகளும் மார்ச் 2014–க்குள் முடிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## தெரு விளக்கு

சேலம் மாநகராட்சிப் பகுதிகளில் மொத்தம் 28,690 தெருவிளக்குகள் கீழ்கண்டுள்ளவாறு பராமரிக்கப்பட்டு வருகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. குழல் விளக்குகள் | – | 19,193 | எண்ணிக்கைகள் |
| 2. சோடியம் ஆவி விளக்குகள் | – | 8,004 | எண்ணிக்கைகள் |
| 3. பாதரச ஆவி விளக்குகள் | – | 259 | எண்ணிக்கைகள் |
| 4. டி 5 விளக்குகள் | – | 1,034 | எண்ணிக்கைகள் |
| 5. சோலார் விளக்குகள் | – | 95 | எண்ணிக்கைகள் |
| 6. உயர் கோபுர மின் விளக்குகள் | – | 15 | எண்ணிக்கைகள் |
| 7. இதர வகை விளக்குகள் | – | 90 | எண்ணிக்கைகள் |
| **ஆக மொத்தம்** | **–** | **28,690** | **எண்ணிக்கைகள்** |

2013–2014 ஆம் ஆண்டில் 93 எண்ணிக்கை டி5 விளக்குகளும், பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் 3 எண்ணிக்கை உயர் கோபுர மின் விளக்குகளும் மற்றும் 36 எல்இடி விளக்குகளும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் மின் சேமிப்பு பணிக்காக 22.03.2013–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு முதற்கட்டமாக தனியார் மூலம் பணிகள் மேற்கொள்ளபட்டு வருகிறது. இதன் மூலம் 35 சதவீதம் வரை மின் சேமிப்பு கிடைக்கும்.

## சாலைகள்

சேலம் மாநகராட்சி 91.34 சதுர கி.மீ. கொண்ட பரப்பளவில் தார்சாலை, ஜல்லி சாலை, சிமெண்ட் சாலை மற்றும் மண் சாலைகள் 848.63 கி.மீ. நீளத்திற்கு கீழ்க்கண்ட விவரப்படி மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. சிமெண்ட் சாலை | – | 57.78 | கி.மீ |
| 2. தார்சாலை | – | 758.85 | கி.மீ |
| 3. ஜல்லி சாலை | – | 12.80 | கி.மீ |
| 4. மண் சாலை | – | 19.20 | கி.மீ |
| **மொத்தம்** | **–** | **848.63** | **கி.மீ** |

### 1. தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP)

சேலம் மாநகராட்சியில் பாதாள சாக்கடை திட்டத்தினால் பழுதடைந்த சாலைகளை சீரமைத்திட தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2013–2014ன் கீழ் ரூ.800.00 இலட்சங்கள் அரசிடமிருந்து மான்யமாக பெறப்பட்டு 45 பணிகள் 15.182 கி.மீ. நீளத்திற்கு ரூ.953.80 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது.

### 2. ஒருங்கிணைந்த நகர்புற அபிவிருத்தி மேம்பாட்டு திட்டம் (IUDM)

ஒருங்கிணைந்த நகர்புற அபிவிருத்தி மேம்பாட்டு திட்டம் (IUDM) 2013–14ன் கீழ் அரசு மான்யமாக ரூ.1549.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பாதாள சாக்கடை திட்டத்தினால் பழுதடைந்த 11 சாலைகளை சீரமைக்கும் பணிகள் 19.130 கி.மீ நீளத்திற்கு ரூ.1350.00 இலட்சம் மதிப்பீட்டிலும், 4 வடிகால் அமைக்கும் பணிகளுக்கு 11.625 கி.மீ நீளத்திற்கு ரூ.771.00 இலட்சம் மதிப்பீட்டிலும், வீராணம் திடக்கழிவு கிடங்கில் உணவுக்கழிவிலிருந்து மின்சாரம் தயாரித்திட பயோ–மெத்தனேசன் பிளாண்ட் ஒன்று ரூ.90.00 இலட்சம் மதிப்பீட்டிலும் எடுத்துக் கொள்ளப்பட்டு 31.01.2014–ல் பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

### 3. திடக்கழிவு மேலாண்மைத் திட்டம்

அ. ரூ.540.40 இலட்சம் மதிப்பீட்டில் ஜே.சி.பி. வாகனம் – 2 எண்ணிக்கையிலும், காம்பாக்டர் வாகனம் – 6 எண்ணிக்கையிலும், டிப்பர் வாகனம் – 2 எண்ணிக்கையிலும், மினி டிப்பர் வாகனம் – 8 எண்ணிக்கையிலும், டம்பர் பிளேசர் வாகனம் – 6 எண்ணிக்கையிலும், டம்பர் பிளேசர் பின்கள் – 115 எண்ணிக்கையிலும், காம்பாக்டர் பின்கள் – 200 எண்ணிக்கையிலும் வாங்கும் பணிக்கு பணி ஆணை வழங்கப்பட்டு அவற்றில் JCB வாகனம் – 2 எண்ணிக்கையிலும் மற்றும் மீதம் உள்ள 22 இனங்கள் அனைத்தும் வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

ஆ. சேலம் மாநகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு, குப்பை கிடங்குக்கென நவீன முறையில் பயன்பாட்டிற்கு தேவைப்படும் உபகரணங்கள், வண்டி வாகனங்கள், டின்கள், இரசாயனப் பொருட்கள், அணுகுசாலை அமைத்தல் கான்கிரீட் தளம், விஞ்ஞான முறையில் கழிவுகள் சேகரிக்கும் குழிகள் மற்றும் குப்பை தொட்டிகள் போன்ற பணிகளுக்கு தோராயமாக ரூ.480 இலட்சம் மதிப்பீட்டில் பொருட்கள் மற்றும் பணிகள் செய்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 4. உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி மற்றும் இயக்கம் & பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி

சேலம் மாநகராட்சிக்கு 2012–2013 ஆம் நிதியாண்டில் உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி மற்றும் இயக்கம் & பாராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியிலிருந்து ரூ.1138.15 இலட்சங்கள் அரசு மான்யமாக ஒதுக்கீடு செய்யப்பட்டதில் கீழ்கண்டுள்ள பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

அ. சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகம், கோட்டம் எண்.28–ல் செவ்வாய்பேட்டை இடுகாட்டில் புதியதாக எரிவாயு தகனமேடை அமைக்கும் பணி ரூ.130.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள பணி ஆணை வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

ஆ. சேலம் மாநகராட்சி அம்மாபேட்டை வார்டு அலுவலக பகுதியில் உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் ரூ. 40.00 இலட்சத்தில் 32 எண்ணிக்கையில் புதிய ஆழ்துளை கிணறுகள் அமைக்கும் பணி முடிக்கப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளது.

இ. சேலம் மாநகராட்சி பகுதியில் திறந்த வெளியில் மனித கழிவு கழிக்கும் நிலை ஒழிக்கும் திட்டத்தில் உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும்

நிதியின்கீழ், புதியதாக 2 கழிப்பிடம் கட்டவும், ஏற்கனவே உள்ள 10 கழிப்பிடங்களை பழுது பணிகள் மேற்கொள்ளவும், மொத்த மதிப்பீடு தொகை ரூ.44.00 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பணி முடிவுற்று பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

ஈ. சேலம் மாநகராட்சி கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகம், கோட்டம் எண்.46–ல் குகை கறிமார்கெட் உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் இறைச்சி கூடம் அமைக்கும் பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது.

உ. இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் 2011–2012 ஆம் ஆண்டு குடிநீர் பணிக்காக ரூ. 2 கோடியே 60 இலட்சம் மதிப்பீட்டில் 3 எண்ணிக்கையில் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

ஊ. இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி 2013–2014ன் கீழ் ரூ.282.49 இலட்சம் மான்யமாக பெறப்பட்டு ரூ.376.00 இலட்சம் மதிப்பீட்டில் சிவதாபுரம், கொண்டலாம்பட்டி பகுதிக்கு குடிநீர் கொண்டு செல்லும் பிரதான குழாய் (அரியாக்கவுண்டம்பட்டி முதல் சிவதாபுரம் சாலை சந்திப்பு வரை) அமைக்கும் பணிக்கு 05.01.2014–ல் பணி ஆணை வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

## 5. கல்வி நிதி

அ. சேலம் மாநகராட்சி பகுதியில் உள்ள மாநகராட்சி பள்ளிகளுக்கு 2012–2013 ஆம் ஆண்டு கல்வி நிதியின் கீழ் ரூ.415.15 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் 20 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டதில் 4 பணிகள் முடிக்கப்பட்டு, மீதம் உள்ள 16 பணிகள் 2013–2014 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டு மாணவ, மாணவியர்களின் பயன்பாட்டில் உள்ளது.

ஆ. சேலம் மாநகராட்சி பகுதியில் 2012–2013 ஆம் ஆண்டு கல்வி நிதியின் கீழ் அங்கன்வாடி மையங்களில் சிறு பழுது மற்றும் பெரிய அளவில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்ய 69 பணிகள் ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

## 6. திறந்தவெளியில் மனித கழிவு கழிக்கும் நிலை ஒழிக்கும் திட்டம்

சேலம் மாநகராட்சியில் 2013–2014 ஆம் ஆண்டில் திறந்தவெளியில் மனித கழிவு கழிக்கும் நிலை ஒழிக்கும் திட்டத்தின் கீழ், புதியதாக கழிப்பகங்கள் தோற்றுவிக்கவும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க. எண்.47109/2011–பி1, நாள்:28.10.2011–ல் 2011–2012 முதல் 2014–2015 ஆம் ஆண்டு வரை பணிகள் செயல்படுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. சேலம் மாநகராட்சி புதியதாக கழிப்பிடம் (Universal Design) வடிவமைப்பின்படி கட்ட, உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி (Infrastructure Gap Filling Fund) 2013–2014ன் படி ரூ.45.00 இலட்சம், மாநில நிதி (State Fund) 2013–2014ன் படி ரூ.30.00 இலட்சம் மற்றும் மாநகராட்சி பொது நிதியின்கீழ் ரூ.5.40 இலட்சம் ஆக மொத்தம் ரூ.80.40 இலட்சம் மதிப்பீட்டில் 4 எண்ணிக்கையில் கழிப்பகங்கள் கட்டும் பணி மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

## 7. குழந்தைகளுக்கான கழிப்பிடம் கட்டுதல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் சிறப்புத் திட்டத்தில் குழந்தைகளுக்கான கழிப்பிடம் கட்டும் திட்டத்திற்கு அரசு மான்யமாக ரூ.33.12 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்துள்ள தொகையுடன் மாநகராட்சி பங்களிப்பாக ரூ.66.24 இலட்சங்கள் சேர்த்து மொத்தம் ரூ.99.36 இலட்சங்கள் மதிப்பீட்டில் 184 பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

## 8. நகர் மற்றும் ஊரமைப்பு திட்ட நிதி

சேலம் மாநகராட்சி பகுதியில் நகர் ஊரமைப்பு துறை நிதி உதவியுடன் விஜயராகவன் நகர், ஜெயா நகர் ஆகிய இரண்டு பகுதிகளில் ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் பூங்கா அமைக்கும் பணி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. சேலம் மாநகராட்சி புதிய பேருந்து நிலைய பகுதியில் ஓமலூர் சாலையில் நகர் ஊரமைப்பு துறை நிதி உதவியுடன் ரூ.105.00 இலட்சம் மதிப்பீட்டில் பாதசாரிகள் கடக்க சுரங்க நடைபாதை (Sub Way) அமைக்க மறு ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

2013–2014 ஆம் நிதியாண்டில் நகர் ஊரமைப்பு துறை நிதி உதவியுடன் மாநகரில் 5 பூங்காக்கள் ரூ.140.00 இலட்சம் மதிப்பீட்டிலும், நடைபாதைப் பணிகள் 17 எண்ணிக்கையில் ரூ.1690.00 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ள உரிய முன்மொழிவுகள் ஆணையாளர், நகர் ஊரமைப்பு துறை, சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

## 9. நவீன மீன் விற்பனை அங்காடி அமைத்தல்

சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகம், கோட்டம் எண்.19–ல் ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் தேசிய மீன்வளர்ச்சி கழகம் ஹைதராபாத் அமைப்பின் மூலம் 90 சதவீதம் மான்யத்துடன் புதிய நவீன மீன் விற்பனை நிலையம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. விரைவில் பணிகள் முடிக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டிற்கு விடப்படவுள்ளது.

## 10. தன்னிறைவுத் திட்டம்

சேலம் மாநகராட்சி 2013–14 ஆம் ஆண்டு தன்னிறைவுத் திட்டத்தின்கீழ், பொதுமக்களின் பங்களிப்பு தொகை மூன்றில் ஒரு பங்கு (1/3) மற்றும் அரசின் பங்களிப்பு மூன்றில் இரண்டு பங்கு (2/3) என்ற விகிதத்தின்

அடிப்படையில், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, சேலம் அவர்களின் நடவடிக்கைகள் ந.க. எண். 910 / 2013 / அ2, நாள்.25.09.2013–ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளதின்படி, சேலம் மாநகராட்சி பகுதியில் சாலை மற்றும் வடிகால் அமைக்க மொத்தம் 4 பணிகளுக்கு ரூ.77.66 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

## 11. நவீன எரிவாயு தகனமேடை

சேலம் மாநகராட்சி அம்மாபேட்டை வார்டு அலுவலகம், கோட்டம் எண்.44 குகை எருமாபாளையம், குப்பை மேடு பகுதியில் உள்ள மயானத்தில் புதிய நவீன எரிவாயு தகனமேடை அமைக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 19229 / பி1 / 2013, நாள்:13.06.2013ன் படி, 2013–2014 ஆம் ஆண்டு உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியின்கீழ் ரூ.100.00 இலட்சமும், மாநகராட்சி பொது நிதியின் கீழ் ரூ.50.00 இலட்சமும், ஆகமொத்தம் ரூ.150.00 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

## 12. உணவு கழிவுகளிலிருந்து மின்சாரம் தயாரித்தல்

சேலம் மாநகராட்சி அம்மாபேட்டை வார்டு அலுவலகம், கோட்டம் எண்.9 வீராணம் மெயின் ரோட்டில் உள்ள எருகிடங்கில் உணவு கழிவுகளில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் பணிக்கு பயோ மெத்தனேசன் பிளான்ட் அரசாணை எண்.492, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் (மாநா2) துறை, நாள்:19.09.2013 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.47666/12/பி3, நாள்:01.10.2013ன்படி 2013–2014 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தி மேம்பாட்டு திட்ட நிதியின் (IUDM)கீழ் ரூ.81.00 இலட்சமும், மாநகராட்சி பொது நிதியின் கீழ் ரூ.9.00 இலட்சமும் ஆகமொத்தம் மதிப்பீடு தொகை ரூ.90.00 இலட்சத்தில் பணிகள்

மேற்கொள்ள சேலம் மாநகராட்சி மன்ற தீர்மானம் எண்.302, நாள் : 30.01.2014–ன்படி அமைத்து 7 ஆண்டுகளுக்கு இயக்கி, பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

## 13. மழைநீர் சேகரிப்பு திட்டம்

சேலம் மாநகராட்சி பகுதிகளில் உள்ள 1,86,079 எண்ணிக்கையிலான வரி விதிப்புகளில் 1,81,879 எண்ணிக்கையிலான வீடுகளுக்கு மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு செய்யப்பட்டுள்ளது. அதேபோல் 681 அரசு அலுவலகங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு செய்யப்பட்டுள்ளது. மீதம் உள்ள 4200 எண்ணிக்கையிலான வீடுகளுக்கும் மழைநீர் சேகரிப்பு செயல்படுத்த பொதுமக்களுக்கு விழிப்புணர்வு செய்யப்பட்டு வருகிறது.

## 14. நகரமைப்பு பிரிவு

சேலம் மாநகராட்சி பகுதியில் கட்டிட அனுமதி கோரி 2013–2014 ஆம் ஆண்டில் 1296 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, கட்டிட அனுமதி கட்டணமாக தொகை ரூ.72.36 இலட்சம் பெறப்பட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## 15. போக்குவரத்து மேலாண்மை

சேலம் மாநகராட்சியின் போக்குவரத்து மேலாண்மை சம்பந்தமாக, திருவனந்தபுரத்தில் நடைபெற்ற பொது தனியார் பங்களிப்பு திட்டத்தில் செய்யப்பட்டுள்ள சாலை பணியை (PPP Road) மாதிரியாகக் கொண்டு, சேலம் மாநகரில் 77.70 கி.மீ நீளம் சாலையை தேர்ந்தெடுத்து அதற்கு தோராய மதிப்பீடாக ரூ.250.00 கோடிக்கு திட்ட முன்மொழிவுகள் தயார் செய்து அரசின் அனுமதி வேண்டி ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

இத்திட்டத்தில் ஒப்பந்ததாரர் பணியை மேற்கொள்வதுடன் அச்சாலையை 15 ஆண்டுகளுக்கு அவர்களே செப்பனிட வழிவகை உள்ளதால், அரசிற்கு சாலை பணியின் செலவினம் கணிசமாக குறைய வாய்ப்புள்ளது. மேற்படி திட்டத்திற்கு உரிய முன்மொழிவுகள் அரசின் அனுமதிக்கு அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

## 16. தனியார் பங்களிப்பு

சேலம் மாநகராட்சி பகுதியில் தனியார் பங்களிப்பில் சூரமங்கலம் வார்டு அலுவலகம், கோட்டம் எண். 18–ல் உள்ள மெய்யனூர் இடுகாட்டில் ரூ.324.00 இலட்சம் மதிப்பீட்டில் நவீன மின் தகனமேடை அமைக்க சேலம் ரோட்டரி சங்கத்தினருக்கு உத்திரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 17. பொது நிதி

அ. சேலம் மாநகராட்சிக்கு சம்பந்தப்பட்ட நான்கு வார்டு அலுவலகங்களிலும் 2013–2014 ஆம் ஆண்டு பொது நிதியின்கீழ் கட்டிடங்கள், கழிப்பகங்கள், சுற்றுசுவர் புதியதாக கட்டும் பணியும், ஏற்கனவே உள்ள கட்டிடங்கள், கழிப்பகங்கள், சுற்றுசுவர் மராமத்து பணிகள் 57 எண்ணிக்கையில் ரூ. 7 கோடியே 80 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.

ஆ. சேலம் மாநகராட்சிக்கு சம்பந்தப்பட்ட நான்கு வார்டு அலுவலகத்திற்குட்பட்ட பகுதிகளில் 2013–2014 ஆம் ஆண்டு பொது நிதியின்கீழ் ரூ.2440.00 இலட்சம் மதிப்பீட்டில் 168 எண்ணிக்கையிலான சாலை பணிகள் முடிக்கப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளது.

இ. சேலம் மாநகராட்சியின் நான்கு வார்டு அலுவலகத்திற்குட்பட்ட பகுதிகளில் 2013–2014 ஆம் ஆண்டு பொது நிதியின்கீழ் ரூ.820.00 இலட்சம் மதிப்பீட்டில் 67 எண்ணிக்கையிலான வடிகால் பணிகள் முடிக்கப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளது.

ஈ. சேலம் மாநகராட்சியின் நான்கு வார்டு அலுவலகத்திற்குட்பட்ட பகுதிகளில் 2013–2014 ஆம் ஆண்டு பொது நிதியின்கீழ் ரூ.126.00 இலட்சம் மதிப்பீட்டில் 19 எண்ணிக்கையிலான வடிகால் தூர்வாரும் பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

உ. சேலம் மாநகராட்சி கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகத்தின் அலுவலக பயன்பாட்டிற்காக 2013–2014 ஆம் ஆண்டில் பொது நிதியின்கீழ் புதிய ஜெனரேட்டர் அமைக்கும் பணி ரூ.7.65 இலட்சம் மதிப்பீட்டில் பணி முடிக்கப்பட்டு அலுவலக பயன்பாட்டில் உள்ளது.

ஊ. சேலம் மாநகராட்சி பகுதியில் 2013–2014 ஆம் ஆண்டு குடிநீர் நிதியின்கீழ் ரூ.373.95 இலட்சம் மதிப்பீட்டில் 101 குடிநீர் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

எ. சேலம் மாநகராட்சி பகுதியில் 2013–2014 ஆம் ஆண்டு வறட்சி நிவாரண நிதியின் கீழ் சூரமங்கலம், அஸ்தம்பட்டி மற்றும் கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகங்களில் ரூ. 1 கோடியே 44 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் 44 இடங்களில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து எச்.டி.பி.இ டேங் அமைத்து புதிய மின் இணைப்பு பெற்று பொது மக்களுக்கு தண்ணீர் வசதி செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

## பொதுப்பிரிவு

அ) சேலம் மாநகராட்சியில் வேலைவாய்ப்பு அலுவலகத்தின் வாயிலாக 2013–2014 ஆம் நிதியாண்டில் கீழ்க்கண்டவாறு காலி பணியிடங்கள் நேரடி நியமனம் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | பதவி | எண்ணிக்கைகள் |
|---|---|---|
| 1 | உதவி பொறியாளர் | 3 |
| 2 | மருத்துவ அலுவலர் (அலோபதி) | 2 |
| 3 | மருந்தாளுநர் (அலோபதி) | 1 |
| 4 | இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர் | 11 |

ஆ) சேலம் மாநகராட்சியில் பணிபுரிந்து பணிக்காலத்தில் இறந்த பணியாளர்களின் வாரிசுகளுக்கும் மற்றும் மருத்துவ இயலாமையின் காரணமாக ஓய்வு பெற்ற பணியாளர்களின் வாரிசுகளுக்கும் கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, சேலம் மாநகராட்சி நியமனக்குழு தீர்மானம் எண்.5, நாள்.13.06.2013–ல் அனுமதிக்கப்பட்டவாறு, பின்வரும் பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | பதவி | எண்ணிக்கைகள் |
|---|---|---|
| 1 | இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர் | 4 |
| 2 | செயல்திறன் உதவியாளர் நிலை–II | 5 |
| 3 | அலுவலக உதவியாளர் | 9 |
| 4 | துப்புரவு பணியாளர் | 101 |

மேலும் மாநகராட்சியில் காலியாக உள்ள 16 எண்ணிக்கையிலான நகர சுகாதார செவிலியர் பணியிடங்களை நிரப்பிட சேலம் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பட்டியல் கோரப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

## பொது சுகாதாரம்

### மருத்துவ மையங்களின் சேவைகள்

சேலம் மாநகராட்சி பகுதிகளில் வாழும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் குடும்ப நலசேவைகளுக்காக நகர் நல மையங்கள் 7 எண்ணிக்கையிலும், கர்ப்பிணிகள் பரிசோதனை செய்தல், பிரசவம் பார்த்தல், பச்சிளம் குழந்தைகள் பராமரித்தல் போன்ற சேவைகளுக்காக தாய் சேய் நல மையங்கள் 15 எண்ணிக்கையிலும், புற நோயாளிகள் சிகிச்சைக்காக அலோபதி மருந்தகங்கள் மற்றும் இந்திய முறை மருந்தகங்கள் 9 எண்ணிக்கையிலும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2013–2014ம் ஆண்டில் மாநகராட்சி தாய் சேய் நல மையங்கள் மூலமாக 1538 பிரசவங்களும் மற்றும் 1 இலட்சத்து 89 ஆயிரத்து 500 புறநோயாளிகளுக்கு சிகிச்சையும் அளிக்கப்பட்டு சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு தொண்டை அடைப்பான், கக்குவான், இரணஜன்னி, மஞ்சள் காமாலை மற்றும் நிமோனியா போன்ற ஐந்து நோய்களுக்கான தடுப்பு மருந்து 7800 குழந்தைகளுக்கும், காசநோய் தடுப்பு மருந்து 6500 குழந்தைகளுக்கும், தட்டம்மை தடுப்பு மருந்து 7000 குழந்தைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

தற்காலிக குடும்ப நல கருத்தடை முறைகளான காப்பர் – 'டி', சாதனம் 1066 தாய்மார்களுக்கு பொருத்தப்பட்டுள்ளது. நிரந்தரமான கருத்தடை அறுவை சிகிச்சை 2880 தாய்மார்களுக்கும் செய்யப்பட்டுள்ளது. மருத்துவ அலுவலர்கள் மற்றும் நகர சுகாதார செவிலியர்களுக்கு இதற்கான சிறப்பு பயிற்சி குடும்பநல துறை மூலமாக வழங்கப்பட்டுள்ளது.

2013–2014 ஆம் ஆண்டில் புறநோயாளிகள் மற்றும் கர்ப்பிணி பெண்களின் பிரசவங்களுக்காக ரூ.20.00 இலட்சத்தில் மருந்துகள் கொள்முதல் செய்து, மாநகராட்சி மருத்துவமனைகளின் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது.

## டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித்திட்டம்

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின்கீழ், வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள கருவுற்ற தாய்மார்கள் மகப்பேறு காலத்தில் ஊட்டச்சத்தான உணவு உண்ணவும், வருவாய் இழப்பை ஈடுகட்டவும் முதல் இரண்டு கர்ப்பத்திற்கு ரூ.12,000/– நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது.

சேலம் மாநகராட்சியில் 2013–2014 ஆம் ஆண்டில் மட்டும் 13860 தாய்மார்களுக்கு ரூ.5,54,40,000/– (5 கோடியே 54 இலட்சத்து 40 ஆயிரம்) மூன்று தவணைகளாக வழங்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள தொகை விரைவில் வழங்கப்பட உள்ளது.

## ஜனனி சுரக்ஷா யோஜனா திட்டம்

இத்திட்டத்தின் மூலம், அரசு மருத்துவமனை மற்றும் மாநகராட்சி அனைத்து நகர் நல மையம், தாய்சேய் நல இல்லம், ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிரசவிக்கும் தாய்மார்களுக்கு தலா ரூ.600/– வழங்கப்படுகிறது.

வீட்டில் நடைபெறும் பிரசவங்கள் மூலம் ஏற்படும் சிக்கல்களை தடுப்பதற்கும், மருத்துவமனைகளில் நடைபெறும் பிரசவங்களை ஊக்குவிக்கவும், இத்திட்டத்தின் மூலம் தாய் மரணம் மற்றும் பச்சிளங்குழந்தைகளின் இறப்பை தடுப்பதற்கும், நடப்பு நிதி ஆண்டில் ரூ.10.50 இலட்சம் வரப்பெற்று 933 தாய்மார்களுக்கு ரூபாய் 5 இலட்சத்து 60 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

2014–2015 ஆம் நிதி ஆண்டில் ரூ.15.00 இலட்சம் நிதியுதவி பெறப்பட்டு தாய்மார்களுக்கு வழங்கப்பட உள்ளது.

## போலியோ நோய் ஒழிப்புத்திட்டம்

போலியோ என்கிற இளம்பிள்ளை நோயை ஒழிக்கும் பொருட்டு கடந்த 17 வருடங்களாக தீவிர போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாம் நடைபெற்று வருகிறது. 2014 ஆம் ஆண்டு ஜனவரி 19–ம் தேதி, 5 வயதிற்குட்பட்ட 82 ஆயிரத்து 938 குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அனைத்து குழந்தைகளுக்கும் மீண்டும் பிப்ரவரி 23–ம் தேதியிலும் போலியோ சொட்டு மருந்து வழங்கப்படவுள்ளது.

கடந்த மூன்று வருடங்களாக இந்தியாவில் ஒரு குழந்தை கூட போலியோ நோயினால் பாதிக்கப்படவில்லை. சேலம் மாநகராட்சி பகுதியில் கடந்த 11 வருடங்களாக ஒரு குழந்தை கூட போலியோ நோயினால் பாதிக்கப்படவில்லை என்பது பெருமைப்படக் கூடிய அம்சமாகும்.

## டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை

2013 – 2014 ஆம் ஆண்டில் ஏப்ரல் மாதம் முதல் நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாநகராட்சி மலேரியா பணியாளர்கள் கொண்டு சிறப்பு கொசுப்புழு ஒழிப்பு பணி மற்றும் அனைத்து பகுதிகளிலும் கொசுக்களை தடுக்கும் விதமாக பழைய டயர்களை அகற்ற குழு அமைத்து அகற்றப்பட்டது. மேலும் மாநகரில் உள்ள அனைத்து கோட்டங்களிலும் உள்ள தெருக்கள் மற்றும் வீடுகளில் டெங்கு காய்ச்சலை பரப்பும் ஈடிஸ் கொசு மற்றும் புழுக்களை ஒழிக்கும் சிறப்பு பணி 19.11.2013 முதல் 20.12.2013 வரை மருத்துவ அலுவலர்கள் தலைமையில் செவிலியர்கள், சுகாதார பணியாளர்கள் மற்றும் 300 மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்களை கொண்டு வீடு, வீடாக சென்று, கொசுக்கள் முட்டையிடும் மழைநீர் தேங்கும் டயர்கள், உடைந்த பிளாஸ்டிக் பொருட்கள், தேங்காய் மட்டைகள் ஆகியவற்றை அப்புறப்படுத்துவது, மேலும் கொசுப்புழுக்களை அழிக்கும் அபேட் (“டெமிபாஸ் 50”) என்ற மருந்தை

அனைத்து வீடுகளிலும் உள்ள தண்ணீர் தொட்டிகளில் ஊற்றுவது போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டது. பள்ளி, கல்லூரி, மருத்துவம் சார்ந்த செவிலியர் மற்றும் மாணவ, மாணவியர்களைக் கொண்டு விழிப்புணர்வு பணியும் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் பகல் நேரங்களில் புகைத் தெளிப்பான் பணியை மேற்கொள்ள புதியதாக 60 எண்ணிக்கையில் கைப்புகைத் தெளிப்பான் இயந்திரங்கள் ரூ.3,49,500/–க்கு வாங்கப்பட்டு ஒவ்வொரு கோட்டத்திற்கும் ஒரு கைப்புகைத்தெளிப்பான் வீதம் வழங்கி பயன்படுத்தபட்டு வருகிறது. இவ்வாறான சிறப்பு பணி மூலம் மாநகரில் டெங்கு காய்ச்சலே இல்லா நிலைமை உருவாக்கப்பட்டது.

### தெருநாய்கள் ஒழிப்புத் திட்டம்

சேலம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட தெருக்களில் சுற்றித்திரியும் தெருநாய்களின் எண்ணிக்கையைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவும், ரேபீஸ் வெறிநாய் கடி நோய் பரவுவதைத் தடுக்கவும், தன்னார்வு தொண்டு நிறுவனம் மூலமாக ஒரு நாய்க்கு ரூ.440/– வீதம், இதுவரையில் 390 நாய்களுக்கு குடும்ப அறுவை சிகிச்சை மேற்கொள்ள ரூ.1,71,600/– செலவிடப்பட்டுள்ளது.

வீராணம் எருக்கிடங்கில் உள்ள நாய்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சை மையத்தினை மேம்படுத்திட அரசிடமிருந்து ரூ.3.00 இலட்சம் மான்யமாக பெறப்பட்டு அதற்கான பணி நடைபெற்று வருகிறது. தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மையத்தில் தொடர்ந்து மின் வசதி இருக்க ரூ.45,000/– செலவில் சூரிய சக்திக்கான மாற்று எரிசக்தி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் தெருநாய்களை பிடித்துவர பிரத்தியேக வாகனம் ஒன்று வாங்கிட அரசின் மான்யமாக ரூ.5.00 இலட்சம் நிதி வரப்பெற்று வாகனம் வாங்கப்படவுள்ளது.

## பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள் வழங்கும் பணி

சேலம் மாநகராட்சியில் பிறப்பு, இறப்பு சான்று வழங்கும் மையங்கள் மூலமாக **2013–2014** ஆம் ஆண்டில் **28,791** பிறப்பு மற்றும் **8,845** இறப்பு நிகழ்வுகளும் பதிவுகள் செய்யப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

தற்போது பொது மக்களிடமிருந்து பெயர் பதிவு மற்றும் பிறப்பு, இறப்பு சான்றிதழ் வழங்கக் கோரி தபால் உரை இணைத்து வரப்பெறும் மனுக்களுக்கு பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்கள் தயார் செய்து அன்றைய தினமே தபால் மூலம் அனுப்பப்பட்டு வருகிறது. இத்திட்டம் பொது மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது.

## ஈமச்சடங்கு மான்யம்

**2013 – 2014** ஆம் ஆண்டில் சேலம் மாநகராட்சிப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வசிக்கும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் வகுப்பினரில் இறந்தவர்களின் ஈமச்சடங்கிற்காக தலா ரூ.**2,500/–** வீதம் **245** குடும்பத்திற்கு உதவித் தொகையாக ரூ.**6,12,500/–** வழங்கப்பட்டுள்ளது.

1) 2012-2013 M« ãÂah©oš xJ¡ÑL brŒa¥g£I bjhif %.13,00,000/- Ïy£r¤Âš 353 eg®fS¡F %.2,500/- Åj« %.8,82,500/- <k¢rl§F khåa« tH§f¥g£lJ.

2) 2013-2014 M« ãÂah©oš xJ¡ÑL brŒa¥g£I bjhif %.13,00,000/- Ïy£r¤Âš 253 eg®fS¡F %.2,500/- Åj« %.6,32,500/- <k¢rl§F khåa« tH§f¥g£lJ.

3) 2012-2013 k‰W« 2013-2014 M« Ïu©L ãÂah©oY« jäHf mséš mÂf bjhif ãÂ xJ¡ÑL bgw¥g£L«, mÂf gadhëfS¡F ãÂ cjé tH§»aÂY« bjhl®ªJ nry« khefuh£Á Kjèl¤Âš ÏUªJ tU»‹wJ.

## பிளாஸ்டிக் ஒழிப்பு

சேலம் மாநகராட்சிக்கு உட்பட்ட அனைத்து கோட்டப் பகுதிகளிலும் 40 மைக்ரான்களுக்கு கீழ் உள்ள பிளாஸ்டிக் உபயோகத்தினை தடுக்கும் பொருட்டு சேலம் மாநகர் மாமன்ற தீர்மானம் எண்.144/நாள்:25.07.2012–ன்படி பிளாஸ்டிக் பை, டீ கப்புகள் மற்றும் இதர பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்துவோர், தயாரிப்பாளர்கள் மற்றும் விற்பனையாளர்களுக்கு அபராதம் விதித்தும், பிளாஸ்டிக் பொருட்களை பறிமுதல் செய்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நடவடிக்கைக்களுக்காக சேலம் மாநகராட்சியின் அனைத்து கோட்ட சுகாதார ஆய்வாளர்களுக்கு 20 எண்ணிக்கையிலான மைக்ரோ மீட்டர்கள் ரூ.2,74,000/– செலவினத்தில் வாங்கி வழங்கப்பட்டுள்ளது.

பிளாஸ்டிக் உபயோகத்தினை முற்றிலுமாக தடுக்கும் பொருட்டு 40 மைக்ரான்களுக்கு உட்பட்ட பிளாஸ்டிக் கைப்பைகள், டீ கப்புகள் மற்றும் பிளாஸ்டிக் கவர்கள் கண்டறியப்பட்டு பிளாஸ்டிக் கவர்களில் அடைத்து விற்கப்படும் பான்பராக், குட்கா மற்றும் வாசனை புகையிலை போன்ற பொருட்களை பயன்படுத்துவதை முற்றிலுமாக ஒழிக்க மாநகர் நல அலுவலர் மற்றும் உதவி ஆணையாளர்கள் தலைமையில் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் மூலம் இதுவரையில் 1500 கிலோ பிளாஸ்டிக் கேரி பேக் மற்றும் பிளாஸ்டிக் டீ கப்புகள் போன்றவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளதோடு ரூ.53,150/– அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

# சொர்ண ஜெயந்தி சகாரி ரோஜ்கர் யோஜனா திட்டம்

## 2013 – 2014 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மானியம் மற்றும் கடன் தொகை விவரம்

### 1. நகர்ப்புற மக்களின் தனி நபர் கடன்

| பயனாளிகளின் எண்ணிக்கை | கடன் தொகை | மானியத் தொகை 25% |
|---|---|---|
| 763 | ரூ.2,06,08,000/– | ரூ.82,88,734/– |

### 2. நகர்ப்புற வேலை வாய்ப்பு பயிற்சி திட்டம்

| பயனாளிகளின் எண்ணிக்கை | பயிற்சி தொகை |
|---|---|
| 505 | ரூ.1,28,84,337/– |

### 3. நகர்ப்புற பெண்கள் சுயதொழில் திட்டம்

| குழுக்களின் எண்ணிக்கை | கடன் தொகை | மானியத் தொகை 35% |
|---|---|---|
| 37 | ரூ.97,00,000/– | ரூ.38,65,301/– |

### 4. நகர்ப்புற மகளிர் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்கள்

| குழுக்களின் எண்ணிக்கை | உறுப்பினர் எண்ணிக்கை | சுழல் நிதித் தொகை |
|---|---|---|
| 132 | 1327 | ரூ.12,88,434/– |

# சொர்ண ஜெயந்தி சகாரி ரோஜ்கர் யோஜனா திட்டம்

## 2013 – 2014 ஆம் ஆண்டில் உத்தேச ஒதுக்கீடு விவரம்

### 1. நகர்ப்புற மக்களின் தனி நபர் கடன்

| பயனாளிகளின் எண்ணிக்கை | கடன் தொகை | மானியத் தொகை 25% |
|---|---|---|
| 527 | ரூ.2,73,96,000/– | ரூ.68,49,058/– |

### 2. நகர்ப்புற வேலை வாய்ப்பு பயிற்சி திட்டம்

| பயனாளிகளின் எண்ணிக்கை | கடன் தொகை |
|---|---|
| 2283 | ரூ.1,82,64,165/– |

### 3. நகர்ப்புற பெண்கள் சுயதொழில் திட்டம்

| குழுக்களின் எண்ணிக்கை | கடன் தொகை | மானியத் தொகை 35% |
|---|---|---|
| 62 | ரூ.1,30,45,000/– | ரூ.45,66,026/– |

### 4. நகர்ப்புற மகளிர் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்கள்

| குழுக்களின் எண்ணிக்கை | உறுப்பினர் எண்ணிக்கை | சுழல் நிதித் தொகை |
|---|---|---|
| 228 | 2282 | ரூ.22,83,033/– |

## கல்வி நிதி

2013–2014க்கு எதிர்பார்க்கப்படும் வருவாய் – ரூ.1006.03 இலட்சங்கள்
2014–2015க்கு உத்தேசிக்கப்படும் வருவாய் – ரூ.1097.91 இலட்சங்கள்

2013–2014ஆம் நிதியாண்டில் மாநகராட்சி பள்ளிகளின் கூடுதல் கட்டிடங்கள் மற்றும் பராமரிப்பு கழிப்பிடம், மின்வசதி, சுற்றுச்சுவர் புதியதாக கட்டும் பணிகளுக்கு ரூ.856.00 இலட்சங்கள் மதிப்பீட்டில் கீழ்க்கண்டுள்ள பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டது.

❖ சூரமங்கலம் மண்டல அலுவலகத்திற்கு உட்பட்ட பழைய சூரமங்கலம், போடிநாய்க்கன்பட்டி, சிவதாபுரம், காமிநாய்க்கன்பட்டி, அரியாகவுண்டன்பட்டி, ஜாகீர்அம்மாபாளையம், சோளம் பள்ளம் மாநகராட்சி பள்ளிகள்.

❖ அஸ்தம்பட்டி மண்டல அலுவலகத்திற்குட்பட்ட N.G.G.O. காலனி, சீரங்கப்பாளையம், கோம்பைபட்டி, (வடக்குப்பகுதி), பெரிய கொல்லப்பட்டி, மணக்காடு, அழகாபுரம், குமாரசாமிபட்டி, பெரியபுதூர், மிட்டாபுதூர், ஐயந்திருமாளிகை, சின்னதிருப்பதி, ராம்நகர், சகாதேவபுரம், சின்னகொல்லப்பட்டி மாநகராட்சி பள்ளிகள் .

❖ கொண்டலாம்பட்டி மண்டல அலுவலகத்திற்குட்பட்ட குகை காளியம்மன் கோவில் தெரு, அன்னதானப்பட்டி, கருவாட்டுமண்டி, குகை (பெண்கள்), மணியனூார், சீல்நாய்க்கன்பட்டி மாநகராட்சி பள்ளிகள்.

மொத்தம் 47 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு 30 பணிகள் முடிக்கப்பட்டு, மீதம் 17 பணிகள் நடைபெற்று வருகிறது.

இதேபோல் 2014–2015 ஆம் நிதியாண்டிலும் மாநகராட்சி பள்ளிகளின் மேம்பாட்டிற்கு கூடுதல் கட்டிடங்கள் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு முன்னுரிமை வழங்கி ரூ.500.00 இலட்சம் ஒதுக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## சத்துணவு மையங்கள்

**புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டத்தின்** கீழ் சேலம் மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் மொத்தம் 62 சத்துணவு மையங்கள் இயங்கி வருகின்றன. (துவக்கப்பள்ளிகள்–36, நடுநிலைப்பள்ளிகள்–14, உயர்நிலைப்பள்ளிகள்–5, மேல்நிலைப்பள்ளிகள்–7) இம்மையங்களில் தினந்தேறும் 8,275 குழந்தைகள் பயன்பெறுகின்றனர். சத்துணவு மையங்களின் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## கணக்குப்பிரிவு

### ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் நலன்

சேலம் மாநகராட்சியில் ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு குடும்ப ஓய்வூதியம் மற்றும் பிரதி மாத ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

2013–2014 ஆம் வருடத்தில் சேலம் மாநகராட்சியின் மைய அலுவலகம் மற்றும் நான்கு வார்டு அலுவலகங்களில் பணிபுரிந்து வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்ற மற்றும் பணிக்காலத்தில் காலமான பணியாளர்களின் இறந்த தேதியினை அடிப்படையாகக் கொண்டு, ஓய்வூதியதாரர்களுக்கும், வாரிசுதாரர்களுக்கும் வழங்கப்பட வேண்டிய ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு செய்து அதற்குரிய தொகை, பணிக்கொடை, தொகுப்பு தொகை ஆகிய ஓய்வூதிய பணப்பயன்கள் தொகை ரூ. 2,53,79,586/– வழங்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியரின் குடும்ப பாதுகாப்பு நிதி மற்றும் மருத்துவ நலநிதி திட்டத்தின்கீழ் 32 ஓய்வூதியதாரர்களுக்கு ரூ.9,86,000/– தொகையாக வழங்கப்பட்டது.

## கட்டுமானத் தொழிலாளர் நல நிதி

2013 – 2014M« M©oš nry« khefuh£Áæš nk‰bfhŸS« gâfŸ bjhl®ghf x¥g³jjhu®fëläU³J, Ão¤j« brŒa¥g£l bjhif k‰W« bghJk¡fëläU³J bgw¥g£l f£Lkhd¤ bjhêyhs® ey ãÂ f£lz« M»ait %.26.27 Ïy£r§fŸ muR¡F brY¤j¥g£LŸsJ.

## புதிய திட்டங்கள்

- மின்சாரத்தினை சேமிக்கும் வகையில் நகரில் உள்ள 19,193 குழல் விளக்குகள் எல்.இ.டி விளக்குகளாக மாற்றப்பட்டு சுமார் 30 சதவீதம் மின் கட்டணம் சேமிக்கப்படும்.

- மாநகரின் போக்குவரவு மேலாண்மையினை சீர் செய்ய ITDP நிறுவனத்தின் மூலம் ஆய்வு பணிகள் மேற்கொண்டு மாநகராட்சி சாலைகளில் போக்குவரவு சீரமைக்கப்படும்.

- மாநகரின் மண்டலத்திற்கு ஒன்று வீதம் நான்கு உடற்பயிற்சி மையங்கள் அமைக்கப்படும்.

- மாநகராட்சியில் உள்ள சாலைகள், கட்டிடங்கள், தெருவிளக்குகள் போன்ற கட்டுமானங்களை GIS மூலம் பதிவு செய்து பயன்படுத்தப்படும்.

- ஜவஹர்லால் நேரு நகர்புற அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்படும்.

- சூரிய சக்தி மூலம் மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தினை விரிவு படுத்துவதுடன், தனியார் கட்டிடங்களிலும் செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

- மாநகரின் நான்கு மண்டலங்களிலும் தெருவோர வாகனங்கள் நிறுத்துமிடம் ஏற்படுத்தப்படும்.

- சேலம் மாநகராட்சிக்கு சொந்தமான பனமரத்துப்பட்டி ஏரியினை அழகுபடுத்தும் பணி குறித்து TNUIFSL அலுவலகத்தில் 18.12.2013–ம் தேதி ஆய்வு கூட்டம் நடைபெற்றது. அப்போது ஏரியினை அழகுபடுத்தும் பணி குறித்து POWER POINT PRESENTATION மூலம் விரிவான திட்ட

அறிக்கையினை இறுதி செய்வது குறித்த ஆய்வு நடைபெற்றது. மேற்படி பணிக்கு நிதி பெறுவது குறித்து நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் சுற்றுச்சூழல் துறை மூலம் நிதி பெற்று மேற்படி ஏரியினை அழகுபடுத்திட வடிவமைக்கும் திட்ட முன்மொழிவுகளை அரசுக்கு அனுப்பிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- போடிநாயக்கன்பட்டி இரயில்வே கீழ் நிலை பாலத்தினை அகலப்படுத்தி அமைக்கப்படும்.

- மாநகர மக்கள் நல்ல ஆரோக்கியத்துடன் இருக்க உதவும் வகையில் நடைபயிற்சி தளம் நான்கு மண்டலங்களிலும் மாநகராட்சி பள்ளி மைதானங்களில் தலா ஒன்று வீதம் அமைக்கப்படும்.

- நான்கு மண்டலங்களிலும் மாநகர மக்கள் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய அனைத்து வரிகளையும் அந்தந்த பகுதியில் உள்ள வங்கிகளில் தனிக்கவுண்டர் ஏற்படுத்தி செலுத்த உரிய வசதிகள் ஏற்படுத்தப்படும்.

- சேலம் மாநகராட்சியில் அனைத்து கோட்டப்பகுதிகளிலும் போக்குவரத்து இடையூறாக உள்ள குறுகலான தெருக்கள் மற்றும் சந்துகளில் கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ள ஏதுவாக நான்கு வார்டு அலுவலகங்களுக்கும் தலா ஒன்று வீதம் நான்கு சிறிய ரக மூன்று சக்கர ஆட்டோக்களில் புகை தெளிப்பான் கருவிகள் பொருத்தி கொசு ஒழிப்புப்பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- சேலம் மாநகராட்சிக்குட்பட்ட நான்கு வார்டு அலுவலக பகுதிகளிலும் உள்ள மாநகராட்சி மருத்துவமனைகளில் வார்டு அலுவலகங்களுக்கு ஒன்று வீதம் நவீன வசதிகள் கொண்ட அறுவை சிகிச்சை அரங்கம் (Operation Theatre) அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- ❖ சேலம் மாநகராட்சிக்குட்பட்ட 9 தாய் சேய் நல மையங்களில் நவீன வசதியுடன் கூடிய பரிசோதனைக்கூடம் (Laboratory Ward) அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- ❖ சேலம் மாநகராட்சியில் 4 வார்டு அலுவலகங்களிலும் துப்புரவு அலுவலர் (பொறுப்பு) அலுவலகத்திற்காக அலுவலகக்கட்டிடம் கட்டித்தரவும், அதனருகிலேயே துப்புரவு பணிகளுக்கான தளவாடப் பொருட்கள் வைக்கும் பாதுகாப்பு அறை ஒன்று கட்டித்தரவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- ❖ கொசுக்களை ஒழிக்கும் குணம் கொண்ட நொச்சிச் செடிகளை வீடுகளில் வைத்து வளர்க்க ஆவண செய்யப்படும்.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் பொற்கால நல்லாட்சியில் சேலம் மாநகராட்சியின் வளர்ச்சிப் பணிகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து வரும் **மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு. கே.பி. முனுசாமி** அவர்களுக்கும், **மாண்புமிகு தமிழக நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களுக்கும், சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், தங்களது தொகுதி மேம்பாட்டு நிதியினை வழங்கி சிறப்பித்து வரும் சேலம் நாடாளுமன்ற உறுப்பினர், சேலம் தெற்கு தொகுதி, சேலம் மேற்கு தொகுதி மற்றும் சேலம் வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகிய அனைவருக்கும் சேலம் மாநகராட்சியின் சார்பில் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலம் மாநகராட்சியின் வளர்ச்சிப் பணிகளுக்குத் துணையாக இருக்கும் வணக்கத்திற்குரிய துணைமேயர் அவர்களுக்கும், மாநகராட்சி ஆணையாளருக்கும், மண்டல குழுத் தலைவர்கள்,

நிலைக்குழுத் தலைவர்கள், நியமனக்குழு உறுப்பினர் மற்றும் மாநகராட்சியின் அனைத்து மாமன்ற உறுப்பினர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலம் மாநகராட்சியின் கண்காணிப்புப் பொறியாளர்(திட்டம்), செயற்பொறியாளர்கள் மற்றும் செயற்பொறியாளர் (திட்டம்), மாநகர நல அலுவலர், உதவி ஆணையர்கள், உதவி செயற்பொறியாளர்கள், அலுவலர்கள் மற்றும் அனைத்துப் பணியாளர்களுக்கும், மாநகராட்சிக்கு உதவியாக உள்ள மாநகர காவல்துறை ஆணையாளர் அவர்களுக்கும் மற்றும் அனைத்துப் பிரிவு காவல் துறையினருக்கும், மேலும் பிற துறைகளின் அலுவலர்களுக்கும், செய்தியாளர்கள் மற்றும் தொலைக்காட்சியினர் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இந்த நிதிநிலை அறிக்கையை தயாரிக்க உறுதுணையாக இருந்த வரி மற்றும் நிதிநிலைக் குழுத்தலைவர் திரு. ஜெ. மாணிக்கம் அவர்களுக்கும், குழு உறுப்பினர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வாடிய பயிரை பார்க்கும் போதெல்லாம் வாடினேன்**
**என்று சொன்னவர் இராமலிங்க வள்ளலார் அவர்கள்**
**அதனை நினைவில் கொண்டுதான்**
**மக்கள் பசியால் வாடிவிடக்கூடாது**
**என்ற நல்லெண்ணத்தில்தான்**
**மாதம் 20 கிலோ விலையில்லா அரிசி**

தமிழ் நாட்டு மக்களுக்கு வழங்கிக் கொண்டிருப்பவர் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள்.

இது போன்ற உயர்ந்த சிந்தனையோடு எண்ணற்ற திட்டங்களை தீட்டி நல்லாட்சி நடத்திவரும் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் எண்ணத்திற்கேற்ப சேலம் மாநகர மக்களுக்கு பல்வேறு நலத்திட்டப் பணிகள் மற்றும் அடிப்படை வசதிகள் செய்து கொடுத்து, சேலம் மாநகரத்தை எல்லாவகையிலும் சிறப்பான, செழிப்பான மாநகரமாக உருவாக்குவோம் என உறுதி அளித்து, இதற்கு உங்கள் அனைவரின் முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனக்கேட்டுக்கொண்டு, அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் சேலம் மாநகர மக்களுக்கு சேவை செய்ய எனக்கு ஒரு நல்ல வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களுக்கும், சேலம் மாநகர மக்களுக்கும் மீண்டும் ஒருமுறை எனது பணிவான வணக்கத்தினையும், நன்றியையும் சமர்பித்து இந்த நிதி நிலை அறிக்கை மீதான உரையை இத்துடன் நிறைவு செய்கிறேன்.

நன்றி.

வணக்கம்.

**எஸ். சவுண்டப்பன்,**
வணக்கத்திற்குரிய மேயர்
சேலம் மாநகராட்சி.

சேலம் – 7.

20.02.2014